சார்பு நீதிமன்றம், பண்ருட்டி

முன்னிலை: திருமதி. அனிதா ஆனந்த், எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,

MCOP. No. 238/2020 and 239/2020

ம.சா.1 நாள் :04.07.2026

| | | |
|---|---|---|
| பெயர் | : | தனசேகர் |
| வயது | : | 53 |
| தந்தை பெயர் | : | பழனி |
| முகவரி | : | 172, பெரியபுறங்கணி, காடாம்புலியூர் அஞ்சல், பண்ருட்டி தாலுக்கா. |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 04th day of July 2026

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் ம.சா.1 குறுக்கு விசாரணை:</u>**

1. 25.08.2020 அன்று மாலை சுமார் 07.00 மணி அளவில் காடாம்புலியூரில் இருந்து காட்டாண்டிக்குப்பம் போகும் சாலையில் கணபதி என்பவரின் நிலத்திற்கு அருகில் விபத்து நடந்தது. நான் விபத்தின் போது Hero Honda மோட்டார் சைக்கிளில் பின்னால் உட்கார்ந்து கொண்டு சென்றேன். வண்டியை குணசேகர் ஓட்டினார். எதிரில் Royal Enfield Bullet ல் வந்தவர் நேரடியாக வண்டியில் மோதினார். அவர் இடித்ததில் நாங்கள் தூக்கி எறியப்பட்டோம். எனது வலது கையிலும் முதுகிலும் பின்னந்தலையிலும் அடிப்பட்டது.

2. என்னை உடனடியாக பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். அன்றைய தினமே எனக்கு சிகிச்சை அளித்து அனுப்பினார். எனக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்பதால் அன்றைய தினமே மருத்துவமனையில் இருந்து அனுப்பட்டேன் என்றால் சரிதான். நான் கூலி வேலையில் ரூ.20,000/– மாதம் செய்தேன் என்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் விவசாய வேலை

செய்கிறேன் என்றால் சரிதான், முந்திரி தோப்பில் கூலி வேலை செய்கிறேன். விபத்து குணசேகரினின் கவனக் குறைவால் ஏற்பட்டது என்றாலும்  Royal Enfield Bullet வண்டியின் ஓட்டுநரின் கவனக்குறைவு இல்லை என்றாலும் சரியல்ல.

3. குணசேகருக்கு Royal Enfield Bullet வண்டியின் ஓட்டுநருக்கும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் எனக்கு தெரியவில்லை. நான் கேட்டிருக்கும் இழப்பீடு தொகை மிகவும் அதிகம் என்றாலும் Insurance நிறுவனம் இழப்பீட்டு தொகையை கடமைப்பட்டவர் இல்லை என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைகிறது.

சாட்சியின் கையொப்பம்

Taken down before me in open court and read over and explained. Understood and acknowledged by the witness to be correct.

ANITHA ANAND Digitally signed by ANITHA ANAND

Sub Judge, Panruti